தினகனி

செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253


# நமது தினகனி

NAMADHU DHINA KANI

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 103 | 4 Pages | 11.11.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 103 | 4 பக்கங்கள் | 11.11.2024 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**செய்யாமற் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்**
**உய்யா விழுமந் தரும்**

**விளக்கம்:**
தான் ஒன்றும் செய்யாதிருக்கத் தனக்குத் தீங்கு செய்தவர்க்கும் துன்பமானாவற்றைச் செய்தால் செய்தபிறகுதப்பமுடியாததுன்பத்தையேகொடுக்கும்.

# விருதுநகர் விழாக்கோலமாக மாறியது முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு 75 ஆயிரம் பேர் திரண்டு வரவேற்பு

விருதுநகர், நவ.11

தமிழக அரசின் நலத் திட்டங்கள் மக்களை சென்று சேர்வதை உறுதி செய்யும் வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அனைத்து மாவட்டங்களிலும் கள ஆய்வு மேற்கொள்ள முடிவு செய்தார்.

அதன்படி தனது முதலாவது கள ஆய்வை கடந்த 5ந்தேதி தெற்கு மண்டலமான கோவையில் நடத்தினார். அதன் தொடர்ச்சியாக இரண்டாவது கள ஆய்வு பணியை விருதுநகரில் மேற்கொள்ள முடிவு செய்தார்.

அதன்படி 2 நாள் பயணமாக சென்னையில் இருந்து இன்று காலை 11.30 மணிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விமானம் மூலம் மதுரை வந்தார். அங்கு அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, ஏ.வ.வேலு, மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன், சாத்தூர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கலெக்டர் சங்கீதா, மேயர் இந்திராணி, மற்றும் மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி எம்.எல்.ஏ., சேடப்பட்டி மணிமாறன், நிர்வாகிகள் வரவேற்றனர்.



இதையடுத்து காரில் விருதுநகர் புறப்பட்டு சென்ற அவருக்கு மாவட்ட எல்லை மற்றும் பொதுப் பணித்துறை அலுவலகம் முன்பு சுமார் 75 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சாலையில் இருபுறமும் திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளித்தனர்.

சுமார் இரண்டரை கிலோ மீட்டர் தூரத்திற்கு கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் பொதுமக்கள் காத்திருந்தனர். அவர்களை பார்த்ததும் உற்சாகம் அடைந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தான்பயணம் செய்த வேனில் இருந்து இறங்கி சாலையில் நடந்து சென்றார்.

அப்போது அவருக்கு ஏராளமானோர் கைகுலுக்கினர். பதிலுக்கு மு.க.ஸ்டாலினும் கைகொடுத்து உற்சாகப்படுத்தினார். சிலர் கோரிக்கை மனுக்களையும் அளித்தனர். தொடர்ந்து மக்கள் வெள்ளத்தில் அங்கிருந்து சூலக்கரை பகுதியில் உள்ள அன்னை சத்யா குழந்தைகள் இல்லத்திற்கு சென்றார்.

அங்கு தங்கியுள்ள குழந்தைகளிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாடுகிறார். தொடர்ந்து விருதுநகர் ஆர்.ஆர்.நகர் அருகிலுள்ள கன்னிசேரிபுதூரில் செயல்பட்டு வரும் தனியார் பட்டாசு ஆலைக்கு செல்கிறார்.

அங்கு பட்டாசு உற்பத்தியாளர்கள் மற்றும் பட்டாசு தொழிலாளர்களுடன் கலந்துரையாடுகிறார். பட்டாசு தயாரிப்பில் ஏற்படும் விபத்துகள், அதனை எதிர்கொள்ள தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளிடம் விளக்கம் கேட்கிறார். மேலும், தொழிலாளர்கள் சந்திக்கும் இன்னல்கள், குறைகளையும் கேட்டறிய உள்ளார்.

இதைத்தொடர்ந்து ஆர்.ஆர்.நகரில் உள்ள ராம்கோ விருந்தினர் மாளிகையில் மதிய உணவு முடிந்ததும், மாலையில் விருதுநகர் புதிய பஸ் நிலையம் பகுதிக்கு வருகிறார். அங்கிருந்து திறந்த காரில் எம்.ஜி.ஆர். சிலை ரவுண்டானா, அருப்புக்கோட்டை ரெயில்வே மேம்பாலம், அல்லம்பட்டி முக்கு ரோடு வழியாக ராமமூர்த்தி சாலை வரை சுமார் 1 கிலோமீட்டர்தூரத்துக்குரோடுஷோ செல்கிறார்.


ஒருசில இடங்களில் காரில் இருந்து இறங்கி நடந்து செல்லவும் திட்டமிட்டுள்ள அவர் பொதுமக்களிடம் மனுக்களையும் பெற்றுக் கொள்கிறார். பின்னர் அதே பகுதியில் உள்ள எஸ்.எஸ்.கே.சரஸ்வதி கிராண்ட் மண்டபத்தில் கட்சி நிர்வாகிகளுடனான ஆலோசனைக்கூட்டம் நடைபெறுகிறது. இதில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு பேசுகிறார்.

விருதுநகர்மாவட்டத்தைபொறுத்தவரை தி.மு.க.வின் நிர்வாக காரணங்களுக்காக வடக்கு மற்றும் தெற்கு மாவட்டமாக செயல்பட்டு வருகிறது. இங்குள்ள 7 சட்டமன்ற தொகுதிகளில் ஸ்ரீவில்லிபுத்தூர் தவிர மற்ற 6 தொகுதிகளிலும் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகளாக ம.தி.மு.க., காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களே உள்ளனர்.

தேர்தல் வெற்றிக்கு ஆலோசனை 2026 சட்டமன்ற தேர்தலில் மாவட்டச் செயலாளர்கள் தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள்தீவிரமாக களப்பணியாற்ற தேவையான ஆலோசனைகளை வழங்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கருத்துவேறுபாடுகளை களைந்து தி.மு.க. அரசு கொண்டு வந்துள்ள மக்கள் நலத்திட்டங்கள் மக்களை சரியாக சென்று சேர்கிறதா என்று அறிந்து அதுபற்றிய விபரங்களை பொதுமக்களிடம் எடுத்துக்கூறி தி.மு.க.வுக்கு அவர்கள் வாக்களிப்பதை உறுதி செய்யும் வகையில் தற்போது முதலே பணிகளை தொடங்கவேண்டும் என்பது தொடர்பாக ஆலோசனைகளை அவர் வழங்க இருக்கிறார்.

கூட்டம்முடிந்ததும்இரவுராம்கோ விருந்தினர் மாளிகையில் தங்கி ஓய்வெடுக்கிறார்.

## வெள்ளை மாளிகை செல்கிறார் டிரம்ப்.. ஜோ பைடனுடன் 13ம் தேதி சந்திப்பு



வாஷிங்டன், நவ.11

அமெரிக்காவின் 47வது ஜனாதிபதியாக குடியரசுக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் மீண்டும் தேர்வுசெய்யப்பட்டுள்ளார். இதையடுத்து அவருக்கு உலக தலைவர்கள் பலரும் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர். அந்தவகையில் தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும், டிரம்ப்பை எதிர்த்துப் போட்டியிட்ட தற்போதைய துணை ஜனாதிபதி கமலா ஹாரிசும் அவருக்கு வாழ்த்து தெரிவித்திருந்தனர். டிரம்ப் வெற்றியை தொடர்ந்து அவருக்கு வாழ்த்து தெரிவித்திருந்த ஜோ பைடன், அதிகார மாற்றத்தை சுமுகமாக நிறைவேற்றுவது குறித்து விவாதிக்க வெள்ளை மாளிகைக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார். இந்நிலையில் டிரம்ப் வருகிற 13ந்தேதி வெள்ளை மாளிகை செல்கிறார். அங்கு ஜனாதிபதியின் ஓவல் அலுவலகத்தில் இருவரும் சந்தித்து பேசுகின்றனர். இந்த தகவலை வெள்ளை மாளிகை நேற்று வெளியிட்டது. அமெரிக்க ஜனாதிபதியாக டிரம்ப் வெற்றி பெற்ற பிறகு ஜோ பைடனை சந்திப்பது இது முதல் முறையாகும்.

தேர்தலுக்குப் பிறகு, பதவியில் இருந்து விலகும் ஜனாதிபதி மற்றும் பதவிக்கு வரவிருக்கும் ஜனாதிபதிக்கு இடையேயான இத்தகைய சந்திப்பு அமெரிக்காவில் வழக்கமாக உள்ளது. இது அமெரிக்காவில் ஜனநாயகத்தின் கீழ் அமைதியான அதிகார பரிமாற்றத்தின் தொடக்கத்தைக் குறிக்கும். எனினும், கடந்த 2020ல் நடந்த ஜனாதிபதி தேர்தலில் டிரம்ப் தோல்வி அடைந்ததும், அவர் ஜோ பைடனுடன் வெள்ளை மாளிகையில் சந்திப்பை நடத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் 47வது ஜனாதிபதியாக வரும் ஜனவரி மாதம் 20ம் தேதி டொனால்டு டிரம்ப் பதவியேற்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

## விரைவு விசா திட்டத்தை நிறுத்தியது கனடா: இந்திய மாணவர்களுக்கு பாதிப்பா..?

ஒட்டாவா, நவ.11

சர்வதேச மாணவர்களுக்கு விரைவில் விசா வழங்கும் நடைமுறையை கனடா கடந்த 2018ம் ஆண்டு கொண்டு வந்தது. இதன் மூலம் இந்தியா, சீனா, பிலிப்பைன்ஸ் உட்பட 14 நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் எளிதாக விசா பெற்று கனடாவில் படிக்கச் சென்றனர். கடந்த ஆண்டில் 8 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கனடா விசா வழங்கி இருந்தது. இந்திய மாணவர்களுக்கு 2 மாதங்களுக்குள் விசா கிடைத்தது. தற்போதைநிலவரப்படி 4 லட்சத்து 27 ஆயிரத்துக்கும் அதிகமான இந்திய மாணவர்கள் கனடாவில் கல்வி பயில்கின்றனர்.

இந்த நிலையில் படிப்பதற்காகவும், வேலைக்காகவும் வெளிநாட்டினர் அதிகம் கனடா வருவதால் அங்கு குடியிருக்க வீடு கிடைப்பது சிரமமாகிவிட்டது. இதர வசதிகள் செய்து தருவதிலும் சிக்கல் ஏற்பட்டது. மாணவர்களின் வாழ்க்கை துணைகளுக்கு வேலை கிடைப்பதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதன் எதிரொலியாக சர்வதேச மாணவர்களின் வருகையை கட்டுப்படுத்த கனடா அரசு முடிவு செய்தது. அதன்படி இந்த ஆண்டு கனடா வரும் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கை 35 சதவீதம் குறைக்கப்பட்டது.

இந்த நிலையில் இந்தியா உள்ளிட்ட 14 நாடுகளை சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கி வந்த விரைவு விசா நடைமுறையை கனடா அரசு நேற்று நிறுத்தி உள்ளது.

இதன்படி அடுத்த ஆண்டில் முதுநிலை பட்டப்படிப்பு உள்பட அனைத்து படிப்புகளிலும் சேர வெளிநாட்டு மாணவர்கள் 4 லட்சத்து 37 ஆயிரம் பேருக்கு மட்டுமே விசா வழங்க உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழி தகுதி தேர்வு நடைமுறைகளும் கடுமையாக்கப்பட்டுள்ளன. சர்வதேச மாணவர்களின் வாழ்க்கைத் துணைவர்கள் வேலை பார்ப்பதற்கு வழங்கப்படும் அனுமதியும் குறைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக சர்வதேச மாணவர்கள் கனடாவில் படிக்க விசா பெறுவதற்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டும், மேலும் மொழித் தேர்வு, முதலீட்டு தொகை உள்பட தங்களின் தகுதிகளையும் உயர்த்திக்கொள்ள வேண்டும். மாணவர்களுக்கான விரைவு விசாவை கனடா நிறுத்தியுள்ளது, அங்கு படிக்க விரும்பும் இந்திய மாணவர்களுக்கு பாதிப்பையும், ஏமாற்றத்தையும் அளித்துள்ளது. கனடாவில் நிலைமை சரியில்லாததால், அங்கு படிக்க இந்திய மாணவர்கள் செல்ல வேண்டாம் என மத்திய அரசும் சமீபத்தில் அறிவுறுத்தியது குறிப்பிடத்தக்கது.

## ஆன்லைனில் வசதியான பெண் அறிமுகம்... விநோத சடங்கால் ரூ.11 லட்சம் இழந்த சீனர்

பீஜிங், நவ.11

சீனாவில் தியான்ஜின் பகுதியை சேர்ந்த வாங் என்பவர் ஆன்லைன் வழியே திருமணத்திற்கு பெண் தேடியிருக்கிறார். இந்நிலையில், லீ என்பவர், தன்னை வசதி படைத்த பணக்கார பெண் என்றும், தனியாக இருக்கிறேன் என்றும் பல்வேறு சொத்துகள் உள்ளன என்றும் ஒரு புது மண வாழ்க்கைக்கு தயார் என்றும் ஆன்லைனில் தெரிவித்து இருக்கிறார்.

இவரை வாங் தொடர்பு கொண்டிருக்கிறார். அப்போது அவரிடம் லீ, திருமணத்திற்கு பின்பு எதிர்கால வாழ்க்கை சிறப்பாக இருக்க வேண்டும் என்றால், முன்னாள் கணவரின் ஆவியை திருப்திப்படுத்த வேண்டியது அவசியம். அதற்கு ஒரு சடங்கு நடத்த வேண்டும்.

இதன்படி, திருமண படுக்கையை எரிக்கும் சடங்கு செய்ய வேண்டும் என கூறியிருக்கிறார். முன்னாள் கணவரிடம் இருந்தே தனக்கு அனைத்து சொத்துகளும் வந்தன என்றும் லீ கூறியிருக்கிறார். இந்த சடங்கு அவருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இருக்கும் என கூறிய லீ, இந்த சடங்கிற்கான 1 லட்சம் யுவானை (ஏறக்குறைய இந்திய மதிப்பில் ரூ.11 லட்சம்) செலவிட்டு வாங் நேர்மையை வெளிப்படுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

பணபரிமாற்றம் செய்ய வேண்டும் என கூறிய லீ, அந்த படுக்கையை எரிக்கும் சடங்கை அவருக்கு காட்டவில்லை. ஏனெனில், அது அவருக்கு துரதிர்ஷ்டம் தந்து விடும் என தெரிவித்து இருக்கிறார்.

எனினும், வாங் பணம் அனுப்பியிருக்கிறார். ஆனால் அதன்பின்னர், லீயை காணவில்லை. அவரை பற்றிய எந்த தகவலும் வாங்கிற்கு தெரியவில்லை. லீ தன்னை நம்ப வைத்து பணமோசடி செய்து விட்டார் என அறிந்து கொண்டார். இதனால் வாங் மனமுடைந்து போனதுடன், பணமில்லாமல் தவித்து வருகிறார். சீனாவின் சில பகுதிகளில் பழமையான மூடநம்பிக்கைகள், இதுபோன்ற சடங்குகள் பாரம்பரிய முக்கியத்துவம் பெற்று விடுகின்றன. மோசடி செய்பவர்கள் இதனை பயன்படுத்தி காதல், நட்பு என ஆன்லைன் வழியே அன்பை வேண்டுபவர்களை எளிதில் மோசம் செய்து விடுவது சீனாவில் அதிகரித்து காணப்படுகிறது. அதனால், ஆன்லைன் வழியே துணையை தேடுபவர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

## அரங்கண்டநல்லூர் சுற்றியுள்ள பகுதியில் ஆற்று மணல் வியாபாரம் படுஜோர்

விழுப்புரம், நவ.11

விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் வட்டம் அரங்கண்டநல்லூர் பகுதியில் தென்பெண்ணை ஆறு ஓடுகிறது. இப்பகுதியில் இரவு நேரங்களில் சட்டத்துக்குப் புறம்பாக மணல் கொள்ளையர்கள் இரு சக்கர வாகனத்தில் மணல் எடுத்துச் செல்வதாக கூறப்பட்ட வந்த நிலையில் 09112024 அன்று இரவு மூட்டைகள் மூலம் இருசக்கர வாகனத்தில் எந்தவித பயமோ பதற்றமோ இல்லாமல் மணலை எடுத்துச் செல்கின்றனர்.

இவர்கள்5கும்மேற்பட்ட இருசக்கர வாகனங்களை எடுத்து வந்து 100 க்கு மேற்பட்ட மூட்டைகளில் மணல் எடுத்துச் சென்று அருகே உள்ள கிராமத்தில் சேர்த்து வைத்து பிறகு தங்கள் பகுதிக்கு எடுத்து சென்று அதனை வியாபாரம் செய்வதாக கூறப்படுகிறது 9 மூட்டைகள் 4000 ரூபாய் வரை விற்கப்படுவதாகவும், இதனால் மாதத்தில் லட்சத்திற்கு மேல் சம்பாதிப்பதாக கூறப்படுகிறது. இதற்கு சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உடந்தையாக இருக்கலாம் எனவும், இது போன்ற மணல் கொள்ளையர்கள் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன் எனவும் சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.



ஆற்றில் மணல் எடுப்பதால் நீர்வளம் குறைந்து நீர் பற்றாக்குறை ஏற்பட்டு குடிநீர் பற்றாக்குறை மற்றும் விவசாயம் பாதிக்கும் நிலை ஏற்படும் எனவே இனியாவது சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மணல் கொள்ளையர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து மணல் கொள்ளையை தடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் வைத்துள்ளனர்.

## மாற்றுத்திறனாளிகளுக்கான புனர்வாழ்வு மருத்துவமனையை இடக்குறைப்பு செய்யும் முடிவினை கைவிட வேண்டும் சீமான்

சென்னை, நவ.11

சென்னை கே.கே.நகரில் செயல்பட்டு வரும் அரசு மாற்றுத்திறனாளிகளுக்கான புனர்வாழ்வு மருத்துவமனையை இடக்குறைப்பு செய்யும் முடிவினை தி.மு.க. அரசு கைவிட வேண்டும் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாட்டில்தான் சென்னை மருத்துவக் கல்லூரியின் எலும்பியல் மற்றும் அறுவை சிகிச்சைப் பிரிவிலிருந்து 1960களின் பிற்பகுதியில் உடலியல் மருத்துவம் மற்றும் புனர்வாழ்வு துறையாக உருவாக்கப்பட்டு, 1979ம் ஆண்டு முதல் கே.கே. நகரில் புனர்வாழ்வு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. மேலும் இந்திய நாட்டிலேயே அரசு நடத்துகின்ற ஒரே செயற்கை உறுப்புகள் தயாரிக்கும் மையம் மற்றும் இயன்முறை சிகிச்சைக்கான அரசுக் கல்லூரியும் இம்மருத்துவமனை வளாகத்திலேயே செயல்பட்டு வருகின்றது.



அத்தகைய சிறப்பு மிக்க கே.கே.நகர் மாற்றுத்திறனாளிகள் புனர்வாழ்வு மருத்துவமனையில் மருத்துவம் பெற்று பல்லாயிரக்கணக்கான நோயாளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பலனடைந்துள்ளனர். தற்போதும் பலர் கழுத்து, கை, கால், முதுகுவலிக்கு மருத்துவம் பெறவும், இயன்முறை மருத்துவம் பெறவும், மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ் பெறவும் இம்மருத்துவமனையின் புறநோயாளி மருத்துவப்பிரிவுக்கு நாள்தோறும் நூற்றுக்கணக்கானோர் வருகின்றனர்.

மேலும் உள்நோயாளிகள் பிரிவில் பக்கவாதம், முதுகு தண்டுவட பாதிப்பு சிகிச்சைக்காகவும் மற்றும் உறுப்புகள் துண்டிக்கப்பட்டோர் பகுதியில் செயற்கை கை, கால்கள் பொருத்தவும் நோயாளிகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இங்கு உடலியல் மருத்துவம் மற்றும் புனர்வாழ்வு பிரிவின்கீழ் ஆண்டுதோறும் 5 முதுநிலை மருத்துவ மாணவர்கள் மூன்றாண்டு பட்டயப்படிப்பு பயின்று வருவதோடு, இயன்முறை பயிற்சி கல்லூரியில் 25 மாணவர்களும், செயற்கை உறுப்புகள் மற்றும் முடநீக்கியல் பயிலகத்தில் 25 மாணவர்களும் ஆண்டுதோறும் பயின்று வருகின்றனர்.

இந்நிலையில் தமிழ்நாடு அரசு புனர்வாழ்வு மையத்தை இடக்குறைப்பு செய்து அந்த இடத்தில் மதியிறுக்கத்தால் (ஆட்டிஸம்) பாதிக்கப்பட்டோர்க்கான சிறப்பு மருத்துவமனை நிறுவ திட்டமிட்டுள்ளதால், தற்போது அங்கு மருத்துவம் பெற்று வரும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் பிற நோயாளிகள் அதிர்ச்சிக்கும், மிகுந்த மன உளைச்சலுக்கும் ஆளாகியுள்ளனர். பல ஆண்டுகளாக எளிதாக மருத்துவமும், இயன்முறை பயிற்சியும் பெறும் வகையில் தரைதளத்தில் செயல்பட்ட புனர்வாழ்வு மையத்தை மதியிறுக்க (ஆட்டிஸம்) மருத்துவமனையாக மாற்ற முயல்வது ஏற்புடையதல்ல. மதியிறுக்கத்தால் (ஆட்டிஸம்) பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவம் அளிக்க வேண்டியதும் மிகவும் இன்றியமையாத தேவைதான் என்றாலும், அதற்காக தற்போது செயல்பட்டுவரும் அரசு புனர்வாழ்வு மையத்தை இடக்குறைப்பு செய்து அங்கு மருத்துவம் பெறும் மாற்றுத்திறனாளிகளுக்கும், மற்ற நோயாளிகளுக்கும் குந்தகம் விளைவிப்பது என்பது எவ்வகையிலும் ஏற்புடையதல்ல.

கடந்த 27012023 அன்று, புனர்வாழ்வுக்கான ஒப்புயர்வு மையமாக இம்மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டு தமிழக முதல்அமைச்சரால் திறந்து வைக்கப்பட்ட நிலையில், தரத்தை உயர்த்திவிட்டு இடத்தை குறைப்பது எவ்வகையில் நியாயமாகும்? ஆகவே, தமிழ்நாடு அரசு சென்னை கே.கே.நகரில் செயல்பட்டுவரும் புனர்வாழ்வு மையத்தை இடக்குறைப்பு செய்யும் முடிவை கைவிட்டு, (மதியிறுக்கத்தால்) ஆட்டிஸம் பாதிக்கப்பட்டவர்களுக்கான சிறப்பு மருத்துவப் பிரிவினை இட நெருக்கடியற்ற, தகுதி வாய்ந்த வேறு இடத்தில் அமைக்க வேண்டுமென இவ்வறிக்கையின் வாயிலாக வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் பெட்ரோல் ஊற்றி மாற்றுத்திறனாளி தீக்குளிக்க முயற்சி

நெல்லை, நவ.11

நெல்லை பாளையங்கோட்டை செந்தில் நகரை சேர்ந்தவர் மகேஷ் (வயது 47). இவரது மனைவி அனிதா. இவர்களுக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர்.

கண் பார்வையற்ற மாற்றுத்திறனாளியான மகேஷ் இன்று தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் நெல்லை கலெக்டர் அலுவலகத்திற்கு மனு அளிப்பதற்காக வந்தார்.



அப்போது கலெக்டர் அலுவலகம் முன்பு மகேஷ் திடீரென தான் கொண்டு வந்திருந்த பெட்ரோல் பாட்டிலை திறந்து தனது உடலில் பெட்ரோலை ஊற்றி தீக்குளிக்க முயன்றார். இதை அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த சிறப்பு சப் இன்ஸ்பெக்டர் ரோகிணி செல்வி தலைமையிலான போலீசார் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். உடனே அவர்கள் ஓடிச்சென்று மகேசிடம் இருந்து பெட்ரோல் பாட்டிலை பறித்தனர்.

பின்னர் அவர் மீது தண்ணீர் ஊற்றினர். தொடர்ந்து அவரிடம் போலீசார் விசாரித்தனர். அப்போது அவரது மனைவி அனிதா போலீசாரிடம் கூறியதாவது:

நாங்கள் கடந்த சில நாட்களுக்கு முன்பு செந்தில் நகரில் ஒரு வீட்டில் வாடகைக்கு குடியேறினோம். தற்போது அந்த வீட்டின் உரிமையாளர் எந்த காரணமும் கூறாமல் வீட்டை காலி செய்யுமாறு எங்களை மிரட்டுகிறார்.

நாங்கள் அவரிடம் அவகாசம் கேட்டோம். ஆனால் அவர் அவகாசம் தர மறுப்பதோடு வீட்டின் மின் இணைப்பை தடை செய்வது உள்ளிட்ட செயல்களில் ஈடுபட்டு தொந்தரவு கொடுக்கிறார். எனவே எங்களுக்கு உரிய அவகாசம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதையடுத்து அவர்களுக்கு அறிவுரை கூறிய போலீசார் இதுதொடர்பாக பாளையங்கோட்டை போலீசில் முறைப்படி புகார் மனு அளியுங்கள் என கூறி தங்களது ரோந்து வாகனத்திலேயே அவர்களை போலீஸ் நிலையத்திற்கு அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் கலெக்டர் அலுவலக பகுதியில் சிறிது நேரம் பரபரப்பை ஏற்படுத்தியது.

★ ★ ★மனைவி, குழந்தைகளு டன் வந்து கலெக்டர் அலுவலக நுழைவு வாயில் முன்பு தீக்குளிக்க முயன்ற மாற்றுத்திறனாளியை மீட்டு போலீசார் விசாரணை நடத்திய காட்சி.

# டிஜிட்டல் பயிர் சர்வேயில் மாணவர்களை ஈடுபடுத்துவதா? அன்புமணி ராமதாஸ் கண்டனம்



சென்னை, நவ.11

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு முழுவதும் வேளாண் நிலம், பயிர் குறித்த அனைத்து விவரங்களையும் டிஜிட்டல்மயமாக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டு வரும் டிஜிட்டல் பயிர் சர்வே பணிகளில் வருவாய்த்துறை அதிகாரிகளை ஈடுபடுத்துவதற்கு பதிலாக வேளாண் கல்லூரி மாணவ, மாணவியர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தமிழ்நாடு அரசின் இயலாமையை மறைப்பதற்காக மாணவ, மாணவியரின் பாதுகாப்பை பலி கொடுப்பது கண்டிக்கத்தக்கது.

இந்தியா முழுவதும் வேளாண் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்படும் பணிகளை ஒருங்கிணைப்பதற்காகவும், நிலத்தின் தன்மை, அளவு, பயிர் வகைகள், விவசாயிகள் வருமானம், கடன், காப்பீடு உள்ளிட்ட அனைத்து தரவுகளையும் டிஜிட்டல் மயமாக்கும் நோக்கத்துடன் நிலங்களை டிஜிட்டல் முறையில் சர்வே செய்வதற்கு மத்திய அரசு ஆணையிட்டுள்ளது. இதற்காக அக்ரிஸ்டாக் என்ற அறக்கட்டளையை உருவாக்கி உள்ள மத்திய அரசு அதன் வாயிலாக இந்தப் பணிகளை மேற்கொள்ள மாநில அரசுகளை கோரியுள்ளது.

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் வருவாய்த் துறை அதிகாரிகளின் மேற்பார்வையில் தனியார் நிறுவனங்களைக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், தமிழ்நாட்டில்மட்டும்வேளாண்மைக் கல்லூரி மாணவர்களைக் கொண்டு நடத்தப்பட்டு வருகிறது. கடந்த 6ம் தேதி தமிழகத்தின் 24 மாவட்டங்களில் உள்ள 48 கிராமங்களில் சோதனை அடிப்படையில் டிஜிட்டல் பயிர் சர்வே நடத்தப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் 22 நாட்கள் நீடிக்கும் முதன்மை சர்வேயை தொடங்கி நவம்பர் மாத இறுதிக்குள் முடிக்க தமிழக அரசின் வேளாண் துறை ஆணையிட்டிருக்கிறது.

நிலத்தின் தன்மை, வளம், உரிமையாளர் விவரங்கள், கடன், காப்பீடு உள்ளிட்ட விவரங்களை டிஜிட்டல் மயமாக்குவது பயனுள்ள நடவடிக்கைகள்என்பதில்ஐயமில்லை. ஆனால், இதை வேளாண்மை கல்லூரி மாணவர்களைக்கொண்டு மேற்கொள்வது தவறானது; இதை ஒருபோதும் அரசு அனுமதிக்கக் கூடாது. மொத்தம் 61 கோடி ஏக்கர் பரப்பளவிலான இப்பணிகளை மாணவர்களைக்கொண்டு முடிப்பது எளிதல்ல. டிஜிட்டல் பயிர் சர்வே பணிகளை மாணவர்களைக் கொண்டு மேற்கொள்வது இரு காரணங்களுக்காக தவிர்க்கப்பட வேண்டியதாகும். முதலில் மாணவர்களின் பாதுகாப்பு.

செப்பனிடப்படாத பகுதிகளில் பணியாற்றும் மாணவ, மாணவிகளை பாம்பு, தேள் போன்ற உயிரினங்கள் கடித்து அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடும். பாதுகாப்பற்ற தனித்த பகுதிகளில் பணியாற்றும் போது மாணவ, மாணவியருக்கு சமூகவிரோதிகளால் பாதிப்பு ஏற்படலாம். இதற்கெல்லாம் அரசு பொறுப்பேற்குமா?.

டிஜிட்டல் பயிர் சர்வே திட்டத்திற்கு ரூ.2817 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசு மட்டும் ரூ.1940 கோடியை வழங்குகிறது. இதில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்படும் நிதியைக் கொண்டு தனியார் நிறுவனங்கள் மூலமாகவோ, கிராம நிர்வாக அலுவலர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதன் மூலமாகவேஇப்பணியை தமிழகத்தில் எளிதாக செய்ய முடியும். அதை விடுத்து மாணவர்கள் மூலம் இந்தப் பணியை செலவின்றி செய்யத்துடிக்கும் அரசு, அதற்காக நிதியை என்ன செய்யப் போகிறது?.

கல்வி கற்க வேண்டிய மாணவ, மாணவியரை இத்தகைய கடுமையான பணிகளில் ஈடுபடுத்தக்கூடாது. மத்திய அரசு வழங்கும் நிதியைக் கொண்டு டிஜிட்டல் பயிர் சர்வே பணியை வேறு அமைப்புகள் மூலம் தமிழக அரசு செய்ய வேண்டும். இந்தப் பணிகளில் இருந்து மாணவர்களை அரசு விடுவிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இனி வரும் காலங்களில் புயல் அனைத்துமே அதிக வலிமையுடன் இருக்கும்! மத்திய புவி அறிவியல் அமைச்சக செயலாளர்

சென்னை, நவ.11



தென்மேற்கு பருவ மழை ஜூன் முதல் செப்டம்பர் வரை நீடிக்கும். இது மே மாத இறுதியில் அல்லது ஜூன் தொடக்கத்தில் தொடங்கி மெதுவாக நாடு முழுவதும் பரவுகிறது. வடகிழக்கு பருவ மழை அக்டோபர் இறுதியில் தொடங்கி டிசம்பர் மாதம் வரை நீடிக்கிறது.

வடகிழக்கு பருவமழை காலங்களில் அதிக புயல்கள் உருவாகும். இத்தகைய புயல்கள் அண்மைக் காலங்களில் அதிதீவிர புயல்களாக உருவாகி இந்தியாவை அச்சுறுத்தி வருகின்றன. இது காலநிலை மாற்றத்தில் விளைவு என்று சொல்லப்படுகிறது.

கடல் வெப்ப அலை ஏற்படுவதால் வரும் நாட்களில் புயல்கள் வலிமையாகும் என மத்திய புவி அறிவியல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மத்திய புவி அறிவியல் அமைச்சக செயலாளர் ரவிச்சந்திரன் நிருபர்கள் சந்திப்பில் கூறியதாவது:

கடல் வெப்ப அலைகளால் வரும் காலங்களில் புயல்கள் வலிமை பெற்றதாக மாறும். வெப்பம் அதிகரிப்பால் மேகங்கள் நீரை சுமக்கும் திறன் அதிகரிக்கும். காலநிலை மாற்றத்தால் மேகங்களின் பரப்பளவு குறைந்து அதிக நீரைக் கொண்டதாக உருவாகின்றன.

'மரைன் ஹீட் வேவ்' மாதக் கணக்கில் தொடர்கிறது. இதனால் புயல்கள் இனி மிகுந்த வலிமை பெற்றதாக மாறும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# மத்திய அரசு இலங்கை அரசை வலியுறுத்தி கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை மீட்க வேண்டும்; ஜி.கே.வாசன்

சென்னை, நவ.11

தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

மத்திய மாநில அரசுகள் தமிழக மீனவர்களின் மீன்பிடித் தொழிலுக்கு உரிய பாதுகாப்பு கொடுக்க வேண்டும். இலங்கை கடற்படையினர் ராமேஸ்வரம் துறைமுகத்தில் இருந்து கடலுக்கு மீன் பிடிக்க சென்ற 23 தமிழக மீனவர்களை கைது செய்து, அவர்களின் 3 படகுகளையும் பறிமுதல் செய்தது மிகவும் கண்டிக்கத்தக்கது.

தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டதால் மீனவர்கள் மிகுந்த சோகத்தில் உள்ளனர். உடனடியாக மீனவர்களை மீட்க மீனவக் குடும்பங்கள் கோரிக்கைவைத்துள்ளனர். கடந்த சில மாதங்களாக தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வதும், படகுகளை பறிமுதல் செய்வதும் அதிகரித்துக்கொண்டே போகிறது.

சமீபத்தில் இந்தியா, இலங்கை அரசுடன் தமிழக மீனவர்கள் பிரச்சனை சம்பந்தமாக இலங்கை கடற்படையினரின் அத்துமீறல் குறித்தும், நல்ல தீர்வு காணவும் பேச்சு வார்த்தை நடத்தியது. ஆனாலும் தமிழக மீனவர்களின்பிரச்சனைக்கு இன்னும் நல்ல தீர்வு ஏற்படவில்லை.



தமிழக மீனவர்களின் வாழ்வாதாரமான மீன்பிடித்தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டு மீனவச்சமுதாயம் பொருளாதார ரீதியாக மிகுந்த சிரமத்தில் உள்ளனர்.

எனவே மத்திய அரசு இலங்கை அரசை வலியுறுத்தி கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் மீட்க வேண்டும். மேலும் மத்திய அரசுதமிழக மீனவர்களின் மீன்பிடி த்தொழிலுக்கு நம்பிக்கை கொடுக்கும் வகையில் இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி, இலங்கை கடற்படையினரின் கைது நடவடிக்கையை முறியடிக்க வேண்டும்.

மத்திய, மாநில அரசுகள் தமிழக மீனவர்களின் மீன்பிடித்தொழில் இலங்கை கடற்படையினரால் பாதிக்கப்படாமல் இருக்க உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ்(மூ) சார்பில் வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# திருமணத்திற்கு மறுத்து இளம்பெண்ணுக்கு மிரட்டல் வாலிபர் மீது வழக்கு



கோவை, நவ.11

திருச்சி மாவட்டத்தை சேர்ந்தவர் 32 வயது இளம் பெண். இவர் கோவை அனைத்துமகளிர்போலீஸ் நிலையத்தில் புகார் மனு அளித்தார். அந்த மனுவில், நான் திருச்சியில் வசித்து வந்தேன். எனக்கு கடந்த 2020ம் ஆண்டு திருவண்ணாமலையை சேர்ந்த எழில் அரசன் என்பவர் பேஸ்புக் மூலம் அறிமுகம் ஆனார்.

அவர் கோவையில் வேலை பார்த்து வருவதாக தெரிவித்தார். அப்போது அவர் என்னுடன் நட்புடன் இருக்க விரும்புவதாக தெரிவித்தார். நானும் அவரது நட்பை ஏற்றுக்கொண்டேன்.

இதையடுத்து நாங்கள் 2 பேரும் பேஸ்புக்கில் பேசி வந்தோம். சில வாரங்களில் எங்களது நட்பு காதலாக மாறியது. இருவரும் ஒருவரையொருவர் காதலித்து வந்தோம். இதையடுத்து நான் திருச்சியில் இருந்து புறப்பட்டு, கோவைக்கு வந்தேன்.

இதையடுத்து எழிலரசனும், நானும், கோவை கணபதி அருகே லட்சுமணபுரத்தில் திருமணம் செய்யாமலேயே லிவிங் டூ கெதர் முறையில் ஒன்றாக வசித்து வந்தோம்.

அப்போது எழிலரசன் என்னுடன் உடலுறவு கொண்டார். நானும், திருமணம் செய்து கொள்ள போகிறவர் தானே என அனுமதித்தேன்.

ஆனால் அதன் பிறகு எழிலரசனின் நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்பட்டது. நான் அவரிடம் தன்னைதிருமணம்செய்து கொள்ளும்படி கேட்டேன். அதற்கு அவர் மறுத்து விட்டார்.

மேலும் என்னை தகாத வார்த்தைகளால் பேசியதுடன், மிரட்டவும் செய்தார். எனவே என்னை திருமணம் செய்வதாக ஏமாற்றிய எழிலரசன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறியிருந்தார்.

புகாரின் பேரில் இன்ஸ்பெக்டர் ரேணுகாதேவி, இளம்பெண்ணை ஏமாற்றிய எழிலரசன் மீது 3 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

# இளம்பெண் காதலிக்க மறுத்ததால் வாலிபர் தற்கொலை

கள்ளக்குறிச்சி, நவ.11

கள்ளக்குறிச்சி மாவட்டம் தச்சூர் கிராமத்தை சேர்ந்தவர்காமராஜ். இவர் சேலத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் ரத்த பரிசோதனை செய்யும் கூடத்தில் ஆய்வக நுட்புனராக பணிபுரிந்து வந்தார். இவர்அதே மருத்துவமனையில் பணிபுரியும் இளம்பெண் ஒருவரை காதலித்து வந்துள்ளார்.

ஆனால் அந்த இளம் பெண் காமராஜை காதலிக்க மறுத்துவிட்டார். இதனால் மனமுடைந்து காணப்பட்ட காமராஜ் கடந்த சில நாட்களுக்கு முன்பு தச்சூரில் உள்ள தனது வீட்டிற்கு வந்துள்ளார். சம்பவத்தன்று அதே பகுதியில் உள்ள தனது நிலத்திற்கு சென்ற காமராஜ், அங்குள்ள மரத்தில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இதுபற்றி தகவல் அறிந்ததும் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த கள்ளக்குறிச்சி போலீசார் காமராஜின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# ஆக்கிரமிப்பு வீடுகளை இடிக்க நடவடிக்கை முதலமைச்சரிடம் மனு கொடுக்க திரண்டவர்களால் பரபரப்பு

மதுரை, நவ.11



மதுரை பீ.பி.குளம் முல்லை நகர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்களின் நிலத்திற்கு பட்டா இல்லையென கூறப்படுகிறது.

இந்த நிலையில் மேற்கண்ட குடியிருப்புகள் நீர்பிடிப்பு பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதாகபுகார்கள் எழுந்துள்ளது. இதையடுத்து அந்த வீடுகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுத்தது.

அதன்படி கடந்த சில நாட்களுக்கு முன்பு அரசின் நீர்வளத்துறை மூலம் குடியிருப்புவாசிகளுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. அதில் 48 ஆயிரத்து 990 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட பீ.பி.குளம் கண்மாய் நீர்பிடிப்பின்ஒரு பகுதியினை ஆக்கிரமிப்பு செய்து உள்ளீர்கள்.

ஆக்கிரமிப்பை காலி செய்வது தொடர்பாக ஏற்கனவே அதற்கான படிவங்கள் மூலம் 2 முறை அறிவிப்பு வழங்கப்பட்டது. ஆனால் இதுவரையில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை. எனவே நாளை 10ந்தேதிக்குள் ஆக்கிரமிப்புகளை தாங்களே அகற்றி கொள்ள காலகெடு வழங்கப்படுகிறது.

அதற்குள் அகற்றாத பட்சத்தில்மறுநாள்(11ந்தேதி) நீர்வளத்துறை மூலம் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும். அப்போது உடமைகளுக்கு சேதம் ஏற்பட்டால் நிர்வாகம் பொறுப்பேற்காது. மேலும் சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

தமிழக அரசின் நீர்வளத் துறை அறிவிப்பு அப்பகுதி மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது. வீடுகளை காலி செய்ய மேலும் கால அவகாசம் வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இந்த நிலையில் நீர்வளத்துறையின் நடவடிக்கைக்கு தடை விதிக்க வேண்டும் என வலியுறுத்தி அப்பகுதி மக்கள் விருதுநகருக்குவரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து மனு கொடுக்க முடிவெடுத்தனர்.

அதன்படி இன்று காலை பீ.பி.குளம் முல்லை நகர் பகுதியை சேர்ந்த பெண்கள் உள்பட 500க்கும் மேற்பட்டோர் வேன், கார், ஷேர் ஆட்டோ, மோட்டார் சைக்கிள்களில் சென்று முதலமைச்சரை சந்தித்து மனு கொடுக்க புறப்பட தயாரானார்கள். இதுகுறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பொதுமக்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். முதலமைச்சரிடம் மனு கொடுக்க உரிய அனுமதி பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. ஆனால் அதனை அவர்கள் ஏற்க மறுத்தனர். தொடர்ந்து போலீசார் அவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

# அதிமுக கள ஆய்வுக்குழு: இன்று ஆலோசனை

சென்னை, நவ.11

கட்சிப் பணிகளை விரைவு படுத்துவதற்காக அதிமுகவில் முன்னாள் அமைச்சர்கள் கே.பி.முனுசாமி, திண்டுக்கல் சீனிவாசன், நத்தம் விசுவநாதன், .தங்கமணி, எஸ்.பி.வேலுமணி, டி.ஜெயக்குமார் சி.வி.சண்முகம் எம்.பி., செம்மலை, பா.வளர்மதி, வரகூர் அருணாசலம் ஆகிய 10 பேர் கொண்ட கள ஆய்வு குழு ஒன்றை அமைத்து கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கடந்த 2 தினங்களுக்கு முன் அறிவித்தார்.

மேற்கண்ட குழுவினர், அதிமுக அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் அனைத்து மாவட்டங்களுக்கும் நேரில் சென்று கள ஆய்வு செய்து, அதன் விபரங்களை வருகிற டிசம்பர் 7ந்தேதிக்குள் அறிக்கையாக சமர்ப்பிக்குமாறு எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டார்.

இந்த நிலையில், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில், நாளை (திங்கட்கிழமை) காலை 10 மணிக்கு 'கள ஆய்வுக் குழு' ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது. சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளதாக கூறப்படுகிறது. இந்த ஆலோசனைக்கு பிறகு மாவட்ட வாரியாக, கிளை, வார்டு, வட்டக்கழகங்கள் மற்றும் சார்பு அமைப்புகளின் செயல்பாடுகளை இந்த குழு நேரடியாக கள ஆய்வு செய்ய உள்ளது.

# பள்ளிக்கு வராத ஆசிரியர்களுக்கு தொடக்க கல்வித் துறை எச்சரிக்கை

சென்னை, நவ.11

தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் கற்றல், கற்பித்தல் செயல்பாடுகளை மேம்படுத்த பல்வேறு முன்னெடுப்புகள் பள்ளிக் கல்வித் துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி பள்ளிகளில் மாணவர்களின் கற்றல் நிலை, உட்கட்டமைப்பு வசதிகள், அரசின் திட்டங்கள் முறையாக சென்றடைகிறதாஎன்பதைதொடர்ந்து கண்காணிக்க வேண்டுமென அனைத்து அலுவலர்களுக்கும்துறைஅமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவுறுத்தியிருந்தார். அதன்படி மாநிலம் முழுவதும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் முதன்மை, மாவட்ட, வட்டாரக் கல்வி அலுவலர்கள் தொடர்ந்து ஆய்வுப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனிடையே தருமபுரி மாவட்டம், அரூர் கல்வி மாவட்டத்துக்கு உட்பட்ட கரிமங்கலம் வட்டாரம், ராமியாம்பட்டி பஞ்சாயத்து நடுநிலைப் பள்ளி ஆசிரியர் கே.பாலாஜி பள்ளிக்கே வராமல், மாற்று நபரை வகுப்பு எடுக்க அனுப்பியது ஆய்வில் தெரியவந்தது. இதையடுத்து ஆசிரியர் பாலாஜி 17வது விதியின் கீழ் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தநிலையில், பள்ளிகளுக்கு வராமல் வேறு நபர்களை அமர்த்தி வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு தொடக்ககல்வித்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. பள்ளிக்குவராமல்வேறொருவரை வேலைக்கு நியமித்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சரியான தகவல்களை தராமல் இருந்தால் தலைமை ஆசிரியர், வட்டார கல்வி அலுவலர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தந்த மாவட்ட தொடக்க கல்வி அலுவலருக்கு அதிகாரம் வழங்கி தொடக்க கல்வி இயக்குனர் அறிவித்துள்ளார்.

# தலைகீழாக நின்று தண்ணீர் குடிக்க முடியாதா? சாதனை படைத்த இளைஞர்




விருதுநகர், நவ.11

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் முகவூர் பகுதியை சேர்ந்தவர்கள் பாப்பையாசுப்புலட்சுமி தம்பதியின் மகன் அருண் குமார். இவர் சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வருகிறார்.

சிறுவயது முதலே ஏதாவது சாதனை படைத்து பலரை திரும்பி பார்க்க வைக்க வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டவர் அருண்குமார்.

தலைகீழாக நின்று தண்ணீர் குடித்தாலும் உன்னால முடியாது என்று சொல்வதுஇவருக்குஏதோ தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஏன் இதை கின்னஸ் சாதனையாக செய்ய கூடாது என்ற எண்ணம் அவருக்கு தோன்றி உள்ளது.

இதுதொடர்பாக அருண் குமார் கூறுகையில்,

தினமும் தலைகீழாக நின்று பயிற்சி செய்தேன். அதன்பிறகு ஒரு கையை ஊன்றி தண்ணீர் குடிக்க பயிற்சி எடுத்தேன்.

தண்ணீர் குடித்தால் முதலில் சிரசில் அடித்து விடும். பிரஷர் தாங்காமல் மூக்கில் இருந்து ரத்தம் கூட வந்து இருக்கிறது. ஒரு கையை ஊன்றி தண்ணீர் குடிப்பது சிரமமாக இருந்தது.

தலைகீழாக நின்று கொண்டு 1 டம்ளர் தண்ணீர் குடிக்க பயிற்சி எடுத்தேன். பின்னர் 2 டம்ளர் தண்ணீர், 3 டம்ளர் தண்ணீர் என பயிற்சி எடுத்தேன்.

மூக்கில் இருந்து ரத்தம் வந்தபோது கூட பயிற்சியை கைவிடாமல் தொடர்ந்தேன்.

இந்த பயிற்சிக்குப் பின்னர் தலைகீழாக நின்று 25.01 வினாடியில் ஒரு லிட்டர் தண்ணீரை குடித்து அருண்குமார் கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

பலர் ஏன் இந்த தேவையில்லாத விஷப்பரீட்சை என்று கூறினாலும் எனது அம்மா, சகோதரர்கள், நண்பர்கள் உன்னால் முடியும் என்று கூறியதால் தான் என்னால் சாதிக்க முடிந்தது.

முறையான பயிற்சி, மருத்துவர்களின் அறிவுரை இல்லாமல் யாரும் தலைகீழாக நின்று தண்ணீர் குடிக்க முயற்சிக்க வேண்டாம்.

என்னதான் அத்தனை பேரும் ஊக்கப்படுத்தினாலும், 'வலிமை' படத்தில் நடிகர் அஜித்தின் பைக் ஸ்டண்ட் பார்த்து தான் முடிந்தால் முடியாதது எதுவும் இல்லை என்ற தன்னம்பிக்கையே வந்ததாக அருண்குமார் கூறினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து வாழ்த்து பெற வேண்டும் என்பதே எனது ஆசை என்று அருண்குமார் தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத்துறையில் உள்ளவர்களை ஊக்குவிப்பது போன்று சாதனை படைத்தவர்களையும் அரசு ஊக்குவிக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# டிரம்ப் வெற்றியால் பின்னலாடை ஏற்றுமதி வர்த்தகத்தில் சாதகமான சூழல் ஏற்பட வாய்ப்பு உற்பத்தியாளர்கள் நம்பிக்கை

திருப்பூர், நவ.11

டொனால்டு டிரம்ப் மீண்டும் அமெரிக்க அதிபராகி உள்ளதால் பின்னலாடை ஏற்றுமதி வர்த்தகத்தில் சாதகமான சூழல் நிலவும் என திருப்பூர் பின்னலாடை துறையினர் நம்பிக்கை கொண்டுள்ளனர். 2வது முறையாக மீண்டும் டொனால்டு டிரம்ப் அமெரிக்க அதிபராகி இருப்பது இந்தியாவுக்கு சாதகமானதாக கருதப்படுகிறது.



டிரம்ப்பின் சீன எதிர்ப்பு கொள்கை, நம் பிரதமருடன்அவர்கொண்டுள்ள நட்பு , பைடன் காலத்தில் கிடப்பில் போடப்பட்டுள்ள வரியில்லாத வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை உயிர்ப்பிக்கப்பட வாய்ப்பு உள்ளிட்ட காரணங்கள் திருப்பூர் பின்னலாடைத்துறைக்கும் சாதகமானதாக அமையும் என்ற எதிர்பார்ப்பு தொழில் துறையினரிடம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து பின்னலாடை துறை ஆலோசகர் சபரி கிரீஷ் கூறியதாவது:

அமெரிக்காவில் ஜனநாயக கட்சியை விட, குடியரசு கட்சி ஆட்சி அமையும்போது அண்டை நாடுகளுடன் இணக்கமான போக்கு கடைபிடிக்கப்படுகிறது. டிரம்ப்பை பொறுத்தவரை போரை விரும்பாதவர்.

உக்ரைனுக்கு அமெரிக்கா ஆயுதம் வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறார். அதனால் உக்ரைன் ரஷ்யா போர் முடிவுக்கு வருவதற்கான வாய்ப்பு உள்ளது. இந்த போர் நின்றால், ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரம் ஸ்திரத்தன்மை பெறும். ஐரோப்பாவுக்கான இந்திய ஏற்றுமதி வர்த்தகம் எழுச்சி பெறும்.

சீன எதிர்ப்பு கொள்கை கொண்டவர் டிரம்ப். ஏற்கனவே இவரது பதவிகாலத்தில்தான், சீனப் பொருட்களுக்கு கூடுதல் வரி விதிக்கப்பட்டது. ஜோ பைடன் ஆட்சி காலத்தில் கிடப்பில் போடப்பட்ட அமெரிக்கா இந்தியா வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தை டிரம்ப்பின் வருகையால் நிறைவேற வாய்ப்பு உள்ளது. இதனால் அமெரிக்காவுக்கான இந்திய பொருட்கள் ஏற்றுமதி அதிகரிக்கும் என்கிற நம்பிக்கை பிறந்துள்ளது.

டாலருக்கு மாற்றாக பொதுவான கரன்சியை கொண்டு வர இந்தியா உள்பட பிரிக்ஸ் நாடுகள் முயற்சித்து வருகின்றன. இதனால் டாலர் ஸ்திரத்தன்மை இழப்பதை டிரம்ப் விரும்பமாட்டார். இந்தியாவில் சில அமெரிக்க பொருட்களுக்கான வரியை குறைக்க அழுத்தம் கொடுப்பார். இது போன்ற ஒரு சில பாதகங்களும் உள்ளன.

சாதக, பாதகங்கள் இருந்தாலும் ஒட்டு மொத்தத்தில் டிரம்ப்பின் வெற்றி இந்தியாவுக்கு நன்மை தருவதாகவே அமையும். நம் நாட்டுடன் குறிப்பாக பிரதமர் மோடியுடன் நல்ல நட்பு கொண்டுள்ளார். அதனால் அமெரிக்காவின் வெளியுறவு கொள்கையில் இந்தியாவுக்கு பாதகமான அம்சங்கள் விலகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தோட்டத்திற்குள் புகுந்து கால்நடை தீவனங்களை ருசித்த காட்டு யானைகள்



கவுண்டம்பாளையம், நவ.11

கோவை மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியான ஆனைக்கட்டி, மாங்கரை, தடாகம், நஞ்சுண்டாபுரம், கணுவாய் போன்ற பகுதிகளில் யானைகள் தொடர்ந்து ஊருக்குள் புகுந்து சேதத்தை ஏற்படுத்தி வருகின்றது. வனத்துறையினரும் யானைகள் வராமல் இருக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

துடியலூரில் இருந்து பன்னிமடை செல்லும் பகுதியில் கதிர்நாயக்கன் பாளையம் சாலையில் லட்சுமி நகர் பேஸ் 3பகுதியை சேர்ந்தவர் மணி.

இவருக்கு அந்த பகுதியில் சொந்தமாக தோட்டம்உள்ளது. அங்குள்ள தோட்டத்து வீட்டில் அவர் குடும்பத்தினருடன் வசித்து வருகிறார். இது தவிர அங்கு மாடுகளையும் வளர்த்து வருகிறார்.

நேற்றிரவு வனத்தை விட்டு வெளியேறிய காட்டு யானைகள், இந்த தோட்டத்து வீட்டிற்குள் புகுந்தன. யானைகள் வந்ததை பார்த்ததும் நாய்கள் குரைத்தன. நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டு, வீட்டில் இருந்தவர்கள் கதவை திறந்து பார்த்தனர்.

அப்போது வீட்டின் வளாகத்திற்குள் 2 காட்டு யானைகள் நின்றிருந்தன. மேலும் அங்கு கால்நடைகளுக்கு வழங்குவதற்காக வைத்திருந்த உணவு பொருட்களை யானைகள் தின்று ருசித்தன.

இதை பார்த்து அதிர்ச்சியான வீட்டில் இருந்தவர்கள் சம்பவம் குறித்து உடனயாக வனத்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு வந்த வனத்துறையினர் நீண்ட நேரம் போராடி யானைகளை வனப்பகுதிக்குள் விரட்டினர்.

இதனால் நேற்று இரவு முழுவதும் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மீண்டும் யானைகள் ஊருக்குள் வந்து சேதத்தை ஏற்படுத்தி விடுமா? என்று அச்சத்தில் இருந்தனர்.

# மதுரையை தார்ப்பாய் போட்டா மூட முடியும்? அதிகாரிகளை கடிந்து கொண்ட செல்லூர் ராஜு




மதுரை, நவ.11

மதுரை மாநகராட்சி செல்லூர் பகுதியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை பணிகளை ஆய்வு மேற்கொண்ட அதிமுக முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ, ஏன் பணிகள் மந்தமாக நடைபெறுகிறது என்று அதிகாரிகளை கடிந்து கொண்டார்.

இதைத்தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஆக்கரமிப்புகளை அகற்ற வேண்டும் என்று உயர்நீதி மன்ற மதுரைக்கிளை சொல்லி இருக்கிறது என்றால் உயர்நீதிமன்றம் முல்லை நகருக்கு மட்டும் சொல்லவில்லை. மதுரையில் இருக்கும் எல்லா இடங்களுக்கும் தான் சொல்லி இருக்கிறது.

அப்படி செய்ய வேண்டும் என்றால் முதலில் உயர்நீதிமன்றத்தை தான் அகற்ற வேண்டும். அதுவும் நீர்நிலையில் தான் இருக்கிறது.

20 நாட்களாக சாக்கடை நீர் நிரம்பி இருக்கிறது. ஏன் அமைச்சர்கள் வந்து பார்க்கக்கூடாதா?

இந்த பகுதியில் தொற்று நோய் பரவி வருகிறது. எல்லோரும் எளிய மக்கள்.

இப்போது பொதுப் பணி துறைக்கு ரூ.11 கோடி ஒதுக்கும் முதலமைச்சர் ஏன் முன்பே செய்யவில்லை.

முதல்வர் ஆய்வு கூட்டம் நடத்தி இருப்பார். மதுரையில் அதிகம் பாதிக்கப்படக்கூடிய இடங்களை சொல்லி இருப்பார்கள். அதற்காக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்த அரசாங்கம் வெறும் பெயரளவுக்கு தான். கூட்டணி பலம் இருக்கிறது.

என்ன கூட்டணியாக இருந்தாலும் இந்த அரசாங்கத்தின் மீது உள்ள வெறுப்புணர்ச்சி காரணமாக இந்த கூட்டணியில் சேரும் கட்சிகள் எல்லாமே வெள்ளத்தில் அடித்துச் செல்லப்போகிறார்கள். இதுதான் நடக்கப்போகிறது என்று கூறினார்.

# பூட்டிய வீட்டில் அழுகிய நிலையில் பிணமாக கிடந்த செல்போன் கடை உரிமையாளர்



திசையன்விளை, நவ.11

நெல்லை மாவட்டம் திசையன்விளை அருகே உள்ள மிட்டாதார்குளம் பகுதியை சேர்ந்தவர் மார்ட்டின் (வயது 38). இவர் பி.எம்.சி. மார்க்கெட்டில் செல்போன் கடை நடத்தி வந்தார்.

இதற்காக மணலிவிளை எம்.ஜி.ஆர். நகர் பஸ் நிறுத்தம் அருகே உள்ள வீட்டில் வசித்து வந்தார். இவரது வீட்டின் கதவு கடந்த சில நாட்களாக பூட்டியே கிடந்தது. இந்த வீட்டில் இருந்து பிணவாடை வீசுவதாக அப்பகுதி மக்கள் திசையன்விளை போலீசாருக்கு புகார் தெரிவித்தனர்.

அதன் பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்றனர். அங்கு தரையில் அழுகிய நிலையில் மார்ட்டின் பிணமாக கிடந்தார். அவர் இறந்து 4 நாட்களுக்கு மேல் இருக்கும் என கூறப்படுகிறது. உடலை கைப்பற்றி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இவரது மனைவி பியூலா. இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர். அதில் ஒரு குழந்தை புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சென்னையில் ஒரு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பியூலா ஆஸ்பத்திரியில் தங்கி மகளை கவனித்து வருகிறார். இதனால் மார்ட்டின் திசையன்விளையில் தனியாக வசித்து வந்தார்.

அவருக்கும் கடந்த சில நாட்களாக உடல் நலக்குறைவு ஏற்பட்டுள்ளது. எனவே அவர் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என போலீசார் சந்தேகிக்கிறார்கள். இது தொடர்பாக போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 6 எம்.பி.பி.எஸ்., 28 பி.டி.எஸ். இடங்கள் வீணானது 20 மாணவர்களுக்கு ஓராண்டு தடை

சென்னை, நவ.11

இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான முதல் சுற்று மற்றும் இரண்டாம் சுற்று கலந்தாய்வு நிறைவடைந்த பிறகு, மீதமுள்ள இடங்களை நிரப்ப இறுதி சுற்று கலந்தாய்வு நடத்தப்பட்டது.

இந்நிலையில், அதில் பங்கேற்று கலந்தாய்வில் இடங்கள் பெற்றவா்களில் சிலா் கல்லூரிகளில் சேராமல் படிப்பை கைவிட்டனா். இதனால், சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் 6 எம்.பி.பி.எஸ். இடங்கள் காலியாகி உள்ளன.

இதேபோன்று, கடலூா் அரசு பல் மருத்துவக் கல்லூரியில் 4 பி.டி.எஸ். இடங்கள், சுயநிதி கல்லூரிகளில் 24 பி.டி.எஸ். இடங்கள் என 28 பல் மருத்துவ இடங்கள் நிரம்பாமல் உள்ளன. மருத்துவ மாணவா் சேர்க்கைக்கு தேசிய மருத்துவ ஆணையம் வழங்கிய அவகாசம் நிறைவடைந்த நிலையில், அந்த இடங்களை இனி நிரப்ப முடியாது.

இதனால் நடப்பாண்டில் அந்த இடங்கள் வீணாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இறுதிச் சுற்று கலந்தாய்வில் பங்கேற்று இடங்களைப் பெற்றவா்களில் எம்.பி.பி.எஸ். ஒதுக்கீடு பெற்ற 4 பேரும், பி.டி.எஸ். ஒதுக்கீடு பெற்ற 16 பேரும் கல்லூரிகளில் சேரவில்லை. இதையடுத்து அவா்களுக்கு அபராதம் மற்றும் ஓராண்டு மருத்துவக் கல்வியில் சேருவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. சில மாணவா்கள் முந்தைய சுற்று கலந்தாய்வின் போதே கல்லூரிகளில் இருந்து விலகுவதற்கான அபராதத்தை செலுத்தியதால் அவா்கள் அடுத்த ஆண்டு கலந்தாய்வில் பங்கேற்கத் தடையில்லை என்று மருத்துவக் கல்வி இயக்கக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# தேஜஸ்வி யாதவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் வாழ்த்து

சென்னை, நவ.11

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ்தள பதிவில் கூறியிருப்பதாவது:

பீகார் மாநிலத்தின் துடிப்புமிக்க இளம் எதிர்க்கட்சித்தலைவர்தேஜஸ்வி யாதவுக்கு பிறந்தநாள் நல்வாழ்த்துகள். சமூகநீதி, மதச்சார்பின்மை, சமத்துவம் ஆகியவற்றில் தாங்கள் கொண்டுள்ள பிடிப்பானது முற்போக்கான பீகாரைத் தொடர்ந்து ஊக்குவிக்கட்டும். நியாயமான, அனைவரையும் அரவணைத்துப் போற்றும் ஓர் எதிர்காலத்துக்காகப் பணியாற்றி வரும் தாங்கள் வலிமையோடும் வெற்றியோடும்திகழவாழ்த்துகிறேன்.



இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# விஜயும் உதயநிதியும் அரசியல் எதிரிதான்: நடிகை வனிதா

தஞ்சாவூா், நவ.11

உலகப் புகழ் பெற்ற தஞ்சைபெரிய கோவிலில் இன்று மதியம் நடிகை வனிதா விஜயகுமார் சாமி தரிசனம் செய்தார். பின்னர் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:

முதல் முறையாக தஞ்சாவூா் பெரிய கோவிலுக்கு வந்திருப்பது மகிழ்ச்சியாக உள்ளது. அரசியலுக்கு வந்துள்ள விஜய்க்கு நான் வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்கிறேன். அரசியலில் புதிய பரிமாணம் எடுத்துள்ளார். விஜய் பெரிய வெற்றி அடைய வேண்டும். விஜயும்உதயநிதியும் அரசியலில் எதிரி என்பது சரிதான். விஜய்உதயநிதி இருவருமே எனக்கு நண்பர்கள். நல்ல தமிழகம் அமைவதற்கு யார் வந்தாலும் நான் ஆதரிப்பேன். இவ்வாறு அவர் கூறினார்.

# திருப்பூரில் த.வெ.க., கொடிகள் துண்டுகள் தயாரிக்க ஆர்டர்கள் கொடுக்கும் நிர்வாகிகள்



திருப்பூர், நவ.11

தமிழக வெற்றிக்கழகம் கட்சியை தொடங்கியுள்ள நடிகர் விஜய் விக்கிரவாண்டியில் நடத்திய முதல் மாநாடு அரசியல் கட்சியினர் மட்டுமின்றி தமிழக மக்களை வெகுவாக கவர்ந்தது. இதையடுத்து தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம், பொதுக் கூட்டம்உள்ளிட்டவற்றை நடத்த விஜய் திட்டமிட்டுள்ளார். இதனால் அக்கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் உற்சாகத்தில் ஆழ்ந்துள்ளனர்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் விஜய் செல்ல உள்ளதால் அந்தந்த மாவட்ட நிர்வாகிகள் இப்போது இருந்தே அதற்கான ஏற்பாடுகளை செய்ய திட்டமிட்டு வருகின்றனர்.

குறிப்பாக அரசியல் கட்சிகள் என்றால் அதில் கொடிகள் பிரதானமாக விளங்குகிறது. எனவே கொடிகள் தயாரிக்க திருப்பூரில் உள்ள கொடி உற்பத்தியாளர்களிடம் ஆர்டர்கள் கொடுக்க தொடங்கி உள்ளனர்.

இது குறித்து திருப்பூரை சேர்ந்த கொடி தயாரிப்பாளர் மகேஷ் கூறியதாவது:

திருப்பூரில் அரசியல் கட்சி கொடி தயாரிப்பில் 3 நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன. முன்பெல்லாம் தேர்தல் சமயங்களில் மட்டுமே கொடிகள் தயாரிக்க அதிக அளவு ஆர்டர்கள் வரும். தற்போது அனைத்து அரசியல் கட்சிகளும் சுற்றுப்பயணம், பொதுக் கூட்டம், மாநாடு எனநடத்துவதால் முன்பை விட கொடிகள் தயாரிக்க ஆர்டர்கள் அதிக அளவு வருகின்றன.

தற்போது நடிகர் விஜய் தொடங்கியுள்ள தமிழக வெற்றிக்கழகத்தின்கொடிகள் தயாரிப்புக்கு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஆர்டர்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கில் மட்டும் தயாரிக்க ஆர்டர்கள் வருகிறது.

மாநாடு நடத்தி உள்ள நிலையில் அடுத்து பொதுக்கூட்டம், நடிகர் விஜய்யின் சுற்றுப்பயணம் நடைபெற உள்ளது. இதனால் அப்போது அதிக அளவு கொடிகள் தேவைப்படும். எனவே ஒரு சில நிர்வாகிகள் கொடிகள் தயாரிக்க ஆர்டர்கள் கொடுத்து வருகின்றனர்.

மாநாட்டின் போது துண்டுகள், காரில் முன்பு கட்டப்படும் கொடிகள் அதிக அளவு விற்பனையானது. துண்டுகள் அதிக அளவு விற்பனையாகி வருகிறது. காரின் முன்பு கட்டப்படும் கொடிகள் ரூ.100 முதல் ரூ.500 வரை விற்பனை செய்யப்படுகிறது. எல்.இ.டி. பொருத்தப்பட்டுள்ள கொடிகள் ரூ.2000, ரூ.3000 வரை விற்பனை செய்யப்படுகிறது.

பெரும்பாலான நிர்வாகிகள் கொடி கம்பத்தில் ஏற்றவும், கைகளில் பிடித்து செல்லக்கூடிய வகையிலான கொடிகள் தயாரிக்க தொடர்ந்து ஆர்டர்கள் கொடுத்து வருகின்றனர். இந்த வகை கொடிகள் ரூ.100 முதல் ரூ.250 வரை விற்பனை செய்யப்படுகிறது.

மேலும் சட்டையில் அணியக்கூடிய பேட்ஜ்கள் அதிக அளவு விற்பனை ஆகிறது. மொத்தமாக இல்லாமல் சில்லரையில் அதிகம் விற்பனை ஆகிறது. எங்கள் நிறுவனத்திற்கு வரும் ஆர்டர்களை சிறிய உற்பத்தியாளர்களுக்கு பிரித்து கொடுக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

திருப்பூரை சேர்ந்த பிரபல வேட்டி தயாரிப்பு நிறுவனத்தினர் கூறுகையில், அனைத்து அரசியல் கட்சிகளின் கரைவேட்டிகள் தயாரித்து கடைகளுக்கு விற்பனைக்கு அனுப்புகிறோம். ஆர்டர்கள் கொடுத்தால் தயாரித்து கொடுக்கிறோம்.

தற்போது விஜய் தொடங்கியுள்ள தமிழக வெற்றி கழகத்தின் கரை போட்ட வேட்டிகள் தயாரித்து கடைகளுக்கு விற்பனைக்கு அனுப்பி வைத்துள்ளோம். இதுவரை ஆர்டர்கள் எதுவும் வரவில்லை. விஜய் கட்சி நிர்வாகிகள் கடைகளிலேயே வாங்கி கொள்கின்றனர். விற்பனைக்கு தகுந்தாற் போல் தயாரித்து அனுப்புகிறோம். அடுத்து விஜய் பொதுக்கூட்டம், சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளதால் நிர்வாகிகள், தொண்டர்களிடம் இருந்து அதிக அளவு ஆர்டர்கள் வரும் என எதிர்பார்த்து காத்திருக்கிறோம் என்றனர்.

# பாதாள சிவலிங்கத்தில் இருந்து தோன்றிய அபூர்வ நீரூற்று பக்தர்கள் திரண்டு சாமி தரிசனம்



தாடிக்கொம்பு, நவ.11

திண்டுக்கல் மாவட்டம் தாடிக்கொம்பு அருகே அகரம் பேரூராட்சிக்கு உட்பட்ட சுக்காம்பட்டியில் ஸ்ரீவாஸ்தீஸ்வரர் கோவில் உள்ளது. அதில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் 20 அடி ஆழத்தில்சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு பக்தர்கள் வழிபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய மாதங்களில் சிவலிங்கத்திற்கு அடியில் நீரூற்று தோன்றி சிவலிங்கம் வழியாக வழிய தொடங்கியது. அந்த நீரானது பாதாள சிவலிங்கத்தைசுற்றிசுமார் 1 அடியிலிருந்து 2 அடி வரை நீரூற்றிலிருந்து வெளியேறி தண்ணீர் அறை முழுவதும் சிவலிங்கத்தை மறைக்கும் அளவிற்கு ஊற்று பெருக்கெடுக்க தொடங்கியது.

இதனைக் கண்ட பக்தர்கள் அந்த தண்ணீரை புனித நீராக கருதி பிடித்து செல்கின்றனர். இந்த தண்ணீர் கும்பாபிஷேகத்திற்கு புனித நீராகவும், தோல் சம்பந்தப்பட்ட நோய்கள், உடலில் ஏற்படும் பல்வேறு வியாதிகளை போக்குவதாகவும், வீடுகள் மற்றும் அலுவலகங்களில் உள்ள தீய சக்திகளை விரட்டும் தன்மை கொண்டதாகவும் கருதி பிடித்து செல்கின்றனர்.

இந்தத்தகவல் பரவியதும் திண்டுக்கல் புறநகர் பகுதிகளில் இருந்தும், பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வாஸ்தீஸ்வரர் கோவிலுக்குவந்து பாதாள சிவலிங்கத்தை வழிபட்டு புனித நீர் பெற்றுச் செல்கின்றனர். கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு 20 அடி ஆழத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யும்போது 2 அடி ஆழத்திற்கு கான்கிரீட் போடப்பட்டு பின்னர் அதன் மேல் டைல்ஸ் கல் பதிக்கப்பட்டு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்நிலையில் ஆறு போல் ஊற்று பெருக்கெடுத்து வருவது மிகுந்த ஆச்சரியத்தை அளிப்பதாகவும் தற்போது புனித நீராக வழங்கப்பட்டு வரும் நிலையில் நோய் தீர்க்கும் மருந்தாக இருப்பதாகவும் பக்தர்கள் தெரிவித்து வருகின்றனர்.

கோவிலுக்கு வரும் பக்தர்கள் அனைவருக்கும் சுக்காம் பட்டி சித்தர்ஸ்ரீலஸ்ரீ துரைஆதித்தன்சுவாமிகள் அருளாசி வழங்கி புனித நீர் மற்றும் காணிக்கை பூக்களை பிரசாதமாக அளித்து வருகிறார்.

# குற்றால அருவிகளில் உற்சாகமாக குளித்து மகிழ்ந்த சுற்றுலா பயணிகள்



தென்காசி, நவ.11

தென்காசி மாவட்டம் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் கடந்த 2 வாரங்களாக பெய்த கனமழையின் காரணமாக குற்றால அருவிகளான மெயின்அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம், புலி அருவி, சிற்றருவி உள்ளிட்ட அருவிகளில் அவ்வப்போது வெள்ளப்பெருக்கு ஏற்படுவதும் பின்பு சீராவதுமாக தொடர்ந்து வந்தது.

இந்த நிலையில் நேற்று பகல் முழுவதும் தென்காசி மாவட்டம் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் மிதமான அளவில் சாரல் மழை விட்டு விட்டு பெய்தது. இதனால் குற்றால அருவிகளில் தண்ணீர் வரத்தும் குறைந்து சீராக கொட்டி வருகிறது.

இன்று விடுமுறை தினம் என்பதால் குற்றாலம் மெயின்அருவியில் காலை முதல் சுற்றுலா பயணிகள் அதிகளவில் குளித்து மகிழ்ந்தனர். ஐந்தருவியின் ஐந்து கிளைகளில் தண்ணீர் விழுந்து வந்த நிலையில் தற்போது 3 கிளைகளில் மட்டுமே அதிகம் தண்ணீர் விழுந்து வருகிறது. பழைய குற்றால அருவியிலும் தண்ணீர் சீராக விழுவதால் விடுமுறை தினத்தை கழிப்பதற்கு குற்றால அருவிகளை நோக்கி சுற்றுலா பயணிகள் காலை முதலே அதிக அளவில் வருகை தந்துள்ளனர்.

# மோட்டார் சைக்கிள் மீது லாரி மோதி காதல் தம்பதி பலி

ஆண்டிபட்டி, நவ.11

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகில் உள்ள இழுப்புதூரை சேர்ந்த முருகன் மகன் ராஜ்குமார் (வயது28). இவருக்கும் ஆண்டிபட்டி அருகில் உள்ள மணியக்காரன்பட்டியை சேர்ந்த மரியாள் என்பவரும் கடந்த 1 வருடத்திற்கு முன்பு காதலித்து இரு வீட்டார் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டனர்.

இந்நிலையில் தீபாவளியை தனது மாமியார் வீட்டில் கொண்டாடுவதற்காக மனைவி மரியாளுடன் ராஜ்குமார் கடந்த வாரம் மோட்டார் சைக்கிளில் ஆண்டிபட்டி மெயின்ரோட்டில் வந்து கொண்டிருந்தார். திம்மரநாயக்கனூர் முருகன் கோவில் அருகே வந்த போது எதிரே குமுளியில் இருந்து வந்த லாரி இவர்கள் மீது பயங்கரமாக மோதியது.

இதில் தூக்கி வீசப்பட்ட ராஜ்குமார் மற்றும் அவரது மனைவியின் தலையில் பலத்த காயம் அடைந்து ஆம்புலன்ஸ் மூலம் தேனி க.விலக்குஅரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ஆஸ்பத்திரியில் அவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால் சிகிச்சையில் இருந்த ராஜ்குமார் நேற்று இரவு பரிதாபமாக உயிரிழந்தார். கணவர் இறந்த செய்தி கேட்டு அவரது மனைவி கதறி அழுத நிலையில் அவரும் இன்று காலை உயிரிழந்தார். காதல் திருமணம் செய்த தம்பதி அடுத்தடுத்து உயிரிழந்தது இரு குடும்பத்தினர் மத்தியில் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியது. இது குறித்து முருகன் கொடுத்த புகாரின் பேரில் ஆண்டிபட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தோட்டத்தில் காட்டுப்பன்றிகள் புகுந்து அட்டகாசம் அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த மக்காச்சோளம் நாசம்



அந்தியூர், நவ.11

ஈரோடு மாவட்டம் அந்தியூர் அடுத்த மேற்கு தொடர்ச்சி மலை வனப்பகுதியில் யானைகள், காட்டு பன்றிகள் உள்ளிட்ட வன விலங்குகள் உள்ளன. இந்த வனப்பகுதியையொட்டி பகுதிகளில் விவசாய நிலங்கள் உள்ளன. இங்கு விவசாயிகள் பல்வேறு பயிர்கள் பயிரிட்டு வருகிறார்கள்.

இந்த நிலையில் அந்தியூர் அடுத்த மலை கருப்பு சாமி கோவில் வனப்பகுதியை ஒட்டியுள்ள கரடிக்கல் பாறை என்ற இடத்தின் அருகே ஜானகி சரவணன் என்பவரின் 8 ஏக்கர் தோட்டம் உள்ளது. இங்கு அவர் விவசாயம் செய்து வருகின்றார். இதில் வாழை, சோளப்பயிர், பருத்தி, மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்கள் பயிரிட்டுள்ளார்.

இந்த நிலையில் வனப்பகுதியில் இருந்து கூட்டமாக காட்டுப்பன்றிகள் வெளியேறியது. இதையடுத்து காட்டு பன்றிகள் ஜானகி சரவணன் விவசாய தோட்டத்திற்குள் புகுந்து பயிர்களை நாசம் செய்தது.

தொடர்ந்து அறுவடைக்கு இன்னும் 10 நாட்களே உள்ள நிலையில் உள்ள மக்காச்சோள பயிர்களை அந்த காட்டு பன்றிகள் சேதப்படுத்தியது. அங்கு 1.50 ஏக்கர் அளவில் பயிரிட்டுள்ள பயிர்களில் 75 சென்ட் பயிர்களை முற்றிலும் சேதப்படுத்தி உள்ளது. இதன் மதிப்பு ரூ.30 ஆயிரம் இருக்கும் என விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர்.

மேலும் வனப்பகுதியில் இருந்து வரும் இந்த வனவிலங்குகளை தடுக்க வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். வன விலங்குகள் தோடங்களில் புகாமல் இருக்க விவசாயிகளுக்கு உதவ வனத்துறையினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று விவசாயிகள் வனத்துறையினருக்கு வேதனையுடன் கோரிக்கைவிடுக்கின்றனர்

மேலும் அறுவடைக்கு சில தினங்களில் இருக்கும் நிலையில் பயிர்கள் சேதம் அடைந்ததை கண்டு விவசாயிகள்வேதனைஅடைந்தனர்.

# ராஜராஜ சோழனின் பிறந்தநாளில் ஆட்சியை நிறுவ உறுதியேற்போம்! அன்புமணி

தஞ்சை, நவ.11

தஞ்சை பெரிய கோவிலை கட்டி மாமன்னன் ராஜராஜ சோழன் உலகிற்கே பெருமை சேர்த்தார். இந்த கோவில் உலக பாரம்பரிய சின்னமாக திகழ்கிறது.

மாமன்னன் ராஜராஜ சோழன் ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தன்று பிறந்ததால் ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மாதத்தில் வரும் சதய நட்சத்திரத்தன்று சதய விழா 2 நாட்கள் வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி 1039வது சதயவிழா அரசு விழாவாக இன்று காலை தொடங்கியது.

சதய விழாவையொட்டி தஞ்சை பெரிய கோவில் முழுவதும் வண்ண மின் விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. மேலும் பெரிய கோவில் முன்பும் அலங்கார தோரண வாயில்களும் அமைக்கப்பட்டுள்ளன. பெரியகோவில் அருகே உள்ள பாலம், சோழன் சிலை பூங்கா உள்ளிட்ட இடங்களிலும் மின்விளக்கு அலங்காரம் செய்யப்பட்டு தஞ்சை நகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது.


இந்நிலையில் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

இராஜராஜ சோழனின் பிறந்தநாளில் ஆட்சியை நிறுவ உறுதியேற்போம்!

தமிழனின் வீரத்தை உலகுக்கு உணர்த்திய பெரும் பள்ளி இராஜராஜ சோழனின் 1039ஆம் சதயவிழா இன்று கொண்டாடப்படுகிறது.

கடல் கடந்து வெற்றிகளை குவித்ததன் மூலம் நம் குலப்பெருமையை உலகுக்கு உணர்த்தியவன் அவன். பாசனத் திட்டங்களுக்கு முன்னோடியாக திகழ்ந்தவன். நாமும் கடுமையாக உழைப்போம்... நமது ஆட்சியை நிறுவுவோம். மக்களுக்கு நல்லாட்சியை வழங்குவோம்! என்று தெரிவித்துள்ளார்.

# பிரியங்கா சோப்ரா பெண்களுக்கான ரோல்மாடல் நடிகை சமந்தா





பிரியங்கா சோப்ரா போன்ற அதிகார, ஆளுமைமிக்க பெண்களை சந்திப்பதும், பழகுவதும் அலாதி மகிழ்ச்சிக்குரியது என்று நடிகை சமந்தா கூறியுள்ளார்.

தென்னிந்திய திரை உலகில் முன்னணி நடிகையான சமந்தாவுக்கு தமிழ், தெலுங்கு திரை உலகில் ஏராளமான ரசிகர்கள் உள்ளனர். தமிழ் சினிமாவில் அறிமுகமாகி தெலுங்கு மொழியில் ஏராளமான படங்களில் நடித்து முன்னணி நடிகையாக திகழ்ந்தார். இந்நிலையில் நாகசைதன்யாவைகாதலித்துதிருமணம்செய்துகொண்டார் சமந்தா. பின்னர், இருவருக்கும்கருத்துவேறுபாடுஏற்பட்டு பிரிந்தனர். இதையடுத்து மீண்டும் சினிமாவில் நடிக்க தொடங்கிய சமந்தா மயோடிசிஸ் என்ற அரியவகை நோயினால் பாதிக்கப்பட்டார். சிகிச்சைக்காக சினிமாவில் இருந்து ஓய்வெடுத்த சமந்தா ஆன்மீகம், உடற்பயிற்சி யோகா ஆகியவற்றில் தீவிர ஆர்வம் காட்டினார். நோயில் இருந்து மீண்டு வந்த சமந்தா புதிய படங்களில் நடிக்க தொடங்கியுள்ளார்.

ஹாலிவுட் வெப் தொடரான சிட்டாடல் தொடரில் பிரியங்கா சோப்ரா, ரிச்சர்ட் மேடன் ஆகியோர் நடித்துள்ளனர். இந்த தொடரின் இந்தி பதிப்பான 'சிட்டாடல் ஹனி பனி'யில் சமந்தா நடித்துள்ளார். இந்த வெப் தொடருக்கு 'சிட்டாடல்: ஹனி பன்னி' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த தொடரில் நடிகர் வருண் தவான் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் இந்தத் தொடரில் சிக்கந்தர் கெர், எம்மா கேனிங், கே கே மேனன் மற்றும் சாகிப் சலீம் ஆகியோர் குறிப்பிடத்தக்க வேடங்களில் நடித்துள்ளனர். ஆக்சன் திரில்லர் நிறைந்த இந்த தொடரை இயக்குனர் ராஜ் மற்றும் டிகே இயக்கியுள்ளர். இது இவர்களது கூட்டணியில் 2வது முறையாக உருவாகும் தொடராகும்.

பிரியங்கா சோப்ரா நடிப்பில் கடந்த ஆண்டு ஓ.டி.டி.யில் வெளியான 'சிட்டாடல்' வெப் தொடர் உலகளவில் ரசிகர்களை ஈர்த்தது. இதன் அடுத்த பாகமாக 'சிட்டாடல் ஹனி பன்னி' தற்போது வெளியாகி பார்வையாளர்களின் கவனத்தை பெற்று வருகிறது.

'சிட்டாடல்' வெப் தொடர் விழாவில் சமந்தா கலந்து கொண்டு தனது சினிமா பயணம் குறித்து மனம் திறந்து பேசினார். சமந்தா பேசும்போது, "சிட்டாடல் உலகளவில் ரசிகர்களை கவர்ந்த வெப் தொடர். இதில் நானும் முக்கிய பங்கு வகித்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. பிரியங்கா சோப்ரா பெண்களுக்கு ஒரு சிறந்த ரோல் மாடல் ஆவார். அவர் நம்மை பெரியளவில் சிந்திக்கவும் தூண்டுகிறார். அவர் போன்ற அதிகார, ஆளுமைமிக்க பெண்களை சந்திப்பதும், பழகுவதும் அலாதி மகிழ்ச்சிக்குரியது.

திறமைமிக்கவர்களுடன் பழகும்போது, நமது சவாலும் பெரிதாகி கொண்டு போகிறது. எனவே ஆளுமைமிக்கவர்களின் நட்பு சிறிது நேரம் கிடைத்தாலும் நல்லது. வாழ்க்கையில் சவால்கள் எப்போதுமே முக்கியமானது", என்றார்.

சமந்தா தற்போது 'தும்பத்' என்ற இன்னொரு வெப் தொடரில் நடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# 'அமரன்': 'இந்த காட்சியில் நடிக்க மிகவும் கடினமாக இருந்தது' சிவகார்த்திகேயன்



இயக்குனர் ராஜ்குமார் பெரிய சாமி இயக்கத்தில் கடந்த மாதம் 31ம் தேதி தீபாவளியன்று வெளியான படம் அமரன். மேஜர் முகுந்த் வரதராஜனின் வாழ்க்கையை மையமாக வைத்து உருவான இப்படத்தில் முகுந்தாக சிவகார்த்திகேயனும், மனைவி இந்து ரெபேக்காவாக சாய்பல்லவியும் நடித்தனர்.

மிகப்பெரிய எதிர்பார்ப்புக்கு மத்தியில் வெளியான இப்படம் இதுவரை ரூ.200 கோடிக்கு மேல் வசூலித்துள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. இந்நிலையில், நேர்காணல் ஒன்றில் கலந்துகொண்ட சிவகார்த்திகேயன், படத்தில் தனக்கு மிகவும் கடினமாக இருந்த காட்சி குறித்து பகிர்ந்துள்ளார். இது குறித்து அவர்கூறுகையில்,

'எனக்கு படத்தில் மிகவும் கடினமாக இருந்த காட்சி எதுவென்றால் கிளைமாக்ஸில் வரும் ஆம்புலன்ஸ் காட்சிதான். அதற்குக் காரணம், என் அப்பாவுக்கும் அப்படித்தான் நடந்தது. அவரும் தனது கடமையைச் செய்து கொண்டிருக்கும்போதே உயிரிழந்தார். அவரது கடைசி தருணங்கள் ஆம்புலன்சுக்குள் இருந்தன. அந்த காட்சியை படமாக்கும் போது என் அப்பா அருகில் இருப்பது போல் உணர்ந்தேன்' என்றார்.

சிவகார்த்திகேயன், அடுத்ததாக ஏஆர் முருகதாஸ் இயக்கத்தில் தற்காலிகமாக எஸ்.கே.23 என பெயரிடப்பட்டுள்ள படத்தில் நடிக்கிறார். இப்படத்தில், ருக்மணி வசந்த் கதாநாயகியாக நடிக்க, அனிருத் இசையமைக்கிறார்.

# 3வது ஒருநாள் போட்டி; ஆஸ்திரேலியாவை வீழ்த்தி தொடரை கைப்பற்றிய பாகிஸ்தான்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவும், அடுத்த ஆட்டத்தில் பாகிஸ்தானும் வெற்றி பெற்று தொடர் 11 என்ற கணக்கில் சமநிலையில் இருந்தது.

இந்நிலையில் இவ்விரு அணிகளுக்கு இடையிலான தொடர் யாருக்கு என்பதை நிர்ணயிக்கும் 3வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி பெர்த்தில் இன்று நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த ஆஸ்திரேலியா, பாகிஸ்தானின் அபார பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 140 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. ஆஸ்திரேலியா தரப்பில் அதிகபட்சமாக சீன் அப்போட் 30 ரன்கள் எடுத்தார். பாகிஸ்தான் தரப்பில் ஷாகின் அப்ரிடி, நசீம் ஷா ஆகியோர் தலா 3 விக்கெட் வீழ்த்தினர்.

இதையடுத்து 141 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய பாகிஸ்தான் 26.5 ஓவர்களில் 2 விக்கெட்டை மட்டும் இழந்து 143 ரன் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2:1 என்ற கணக்கில் பாகிஸ்தான் கைப்பற்றியது.

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர்: ஆஸ்திரேலிய அணி அறிவிப்பு



இந்திய கிரிக்கெட் அணி, ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பார்டர்கவாஸ்கர் கோப்பையான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இந்தியா ஆஸ்திரேலியா அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பெர்த்தில் வருகிற 22ந் தேதி தொடங்குகிறது. இந்த தொடருக்கான இந்திய அணி ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுவிட்டது. இந்த நிலையில், இந்தியாவுக்கு எதிரான பார்டர்கவாஸ்கர் தொடருக்கானஆஸ்திரேலியஅணிஅறிவிக்கப்பட்டுள்ளது. அணியை பேட் கம்மின்ஸ் வழிநடத்த உள்ளார். மேலும் இரண்டு புதுமுக வீரர்களுக்கு அணியில் இடம் கொடுக்கப்பட்டு ள்ளது. பார்டர்கவாஸ்கர் தொடருக்கான ஆஸ்திரேலிய அணி விபரம்: பாட் கம்மின்ஸ் (கேப்டன்), ஸ்காட் போலண்ட், அலெக்ஸ் கேரி, ஜோஷ் ஹேசில்வுட், டிராவிஸ் ஹெட், ஜோஷ் இங்கிலிஸ், உஸ்மான் கவாஜா, மார்னஸ் லாபுசேன், நாதன் லியோன், மிட்ச் மார்ஷ், நாதன் மெக்ஸ்வீனி, ஸ்டீவ் ஸ்மித், மிட்செல் ஸ்டார்க்.

# ரஞ்சி கோப்பை: ஷம்ஸ் முலானி அபார பந்துவீச்சு.. ஒடிசாவை வீழ்த்தி மும்பை இன்னிங்ஸ் வெற்றி

ரஞ்சி கோப்பை கிரிக்கெட் போட்டி பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் எலைட் பிரிவில் இடம் பெற்றுள்ள 32 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதுகின்றன. இதில் நடப்பு சாம்பியன் மும்பைஒடிசா (ஏ பிரிவு) இடையிலான ஆட்டம் மும்பையில் நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற ஒடிசா முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்த மும்பை முதல் இன்னிங்சில் 4 விக்கெட்டுக்கு 602 ரன்கள் குவித்து டிக்ளேர் செய்தது. அதிகபட்சமாக ஸ்ரேயாஸ் ஐயர் 233 ரன்கள் குவித்தார். இதனையடுத்து ஆடிய ஒடிசா அணி முதல் இன்னிங்சில் 285 ரன்னில் ஆல்அவுட் ஆகி பாலோஆன் ஆனது. மும்பை தரப்பில் அதிகபட்சமாக ஷம்ஸ் முலானி 6 விக்கெட்டுகளை அள்ளினார். பின்னர் 317 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2வது இன்னிங்சை ஆடிய ஒடிசா 3வது நாள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 126 ரன்கள் அடித்திருந்தது. இந்நிலையில் 4வது மற்றும் கடைசி நாள் ஆட்டம் இன்று நடைபெற்றது. தொடர்ந்து பேட்டிங் செய்த ஒடிசா 72.5 ஓவர்களில் 214 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இதனால் மும்பை அணி இன்னிங்ஸ் மற்றும் 103 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. மும்பை தரப்பில் ஷம்ஸ் முலானி 5 விக்கெட்டுகளும், ஹிமான்ஷூ சிங் 4 விக்கெட்டும் வீழ்த்தினர். இரு இன்னிங்சிலும் சேர்த்து 11 விக்கெட்டுகள் அள்ளிய ஷம்ஸ் முலானி ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.